**செய்தி வெளியீடு எண் :1095** **நாள்: 02.07.2022**

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தல் 18.07.2022 அன்று நடைபெறவுள்ளது. இத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு, சென்னை – 600 009, புனித ஜார்ஜ் கோட்டை, சட்டமன்றப் பேரவைச் செயலக வளாகத்தில் அமைந்துள்ள "குழுக் கூட்ட அறையில்" காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும். இத்தேர்தலை நடத்த சட்டமன்றப் பேரவைச் செயலாளர் முனைவர் கி. சீனிவாசன் மற்றும் சட்டமன்றப் பேரவைச் செயலக இணைச் செயலாளர் திருமதி இரா. சாந்தி ஆகியோர் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் உதவி தேர்தல் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் மேற்கூறிய இடத்தில் வாக்களிக்கலாம். மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிற மாநில சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் இந்திய தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெற்றபின் மேற்கூறிய இடத்தில் வாக்களிக்கலாம்.

சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் எவரேனும் புதுதில்லியிலுள்ள பாராளுமன்ற வளாகத்தில் அமைக்கப்படும் வாக்குச்சாவடியில் வாக்களிக்க விரும்பினால், அதனை "படிவம்-A" வாயிலாகவும் அல்லது பிற மாநில சட்டமன்றப் பேரவைச் செயலக வளாகத்தில் அமைக்கப்படும் வாக்குச்சாவடியில் வாக்களிக்க விரும்பினால், அதனை "படிவம்-B" வாயிலாகவும், நியாயமான காரணங்களுடன் வாக்குப் பதிவு நடைபெறும் நாளுக்கு பத்து நாட்களுக்கு முன்பாக இந்தியத் தேர்தல் ஆணையத்தினை சென்றடையும் வகையில் கீழ்க்காணும் முகவரிக்கு நேரிடையாக அனுப்பி வைக்கவேண்டும்:

திரு. சுமன் குமார் தாஸ்,
செயலாளர்,
நிர்வச்சன் சதன், அசோகா சாலை,
புதுதில்லி 110 001.
(மின்னஞ்சல்: skdas@eci.gov.in / president-cell@eci.gov.in

இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு தங்கள் விருப்பத்தினை தெரிவித்த பின்னர், அதுவே இறுதியானது என்பதால் அதனை மாற்ற ஆணையம் அனுமதிக்காது.

சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்க வரும்போது அவர்களுடைய அடையாள அட்டையை உதவி தேர்தல் அதிகாரியிடம் காண்பிக்க வேண்டும் அல்லது வாக்களிக்க ஏதுவாக உதவி தேர்தல் அதிகாரி ஏற்பளிக்கும் வகையில், தான் வாக்காளர் என்பதை நிரூபிக்க வேண்டும்.

செயலாளர்
வாக்குச்சாவடி தலைமை அலுவலர்/
உதவித் தேர்தல் அதிகாரி
குடியரசுத் தலைவர் தேர்தல், 2022

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in